

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 11 ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அதிகாரம் : வாழ்க்கைத் துணைநலம் - குறள் எண் : 54**

### குறள்

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

### குறள் விளக்கம்

கற்பென்னும் திண்மை கொண்ட பெண்மையின் உறுதிப் பண்பைப் பெற்றுவிட்டால், அதைவிடப் பெருமைக்குரியது வேறு எதுவுமில்லை.

### பழமொழி ( Proverb )

***A young calf knows no fear***

**இளங்கன்று பயமறியாது**

### பொன்மொழி

சந்தனம் எவ்வளவு தேய்த்தாலும் தன் நறுமணத்தினையே பிறருக்கு கொடுக்கும். அதுபோல நல்லவர்கள் வறுமை அடைந்தாலும் தன் நற்குணத்திலிருந்து மாறுவதில்லை.

### இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

### இன்றைய பொது அறிவு வினா விடை

1. இரயிலை நிறுத்த உதவும் அபாயச் சங்கிலியைக் கண்டுபிடித்தவர்?

   ஜார்ஜ் வெல்டிங் ஹவுஸ்

2. பிரஷர் குக்கரை ( Pressure cooker ) கண்டுபிடித்தவர்? டெனிஸ் பாபின்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

***Who would like to read?***

யார் வாசிக்க விரும்புகிறவர்கள் ?

***Your time is up.***

உங்களுக்கான நேரம் நிறைவடைந்தது.



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி
# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- குவைத் தேசிய தினம்
- மாதிரி அணு ஆயுதத்தை சுமந்து சென்ற இந்தியாவின் முதல் ஏவுகணையான ப்ருத்வி ஏவப்பட்டது(1988)
- சாமுவேல் கோல்ட், சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்க காப்புரிமத்தை பெற்றார்(1836)
- தாமஸ் டெவன்போர்ட், மின்சாரத்தில் இயங்கும் மோட்டருக்கான காப்புரிமத்தை பெற்றார்(1837)

### இன்றைய செய்திகள்

- உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா நேற்று போர் தொடுத்தது. அதனால் தங்கம் மற்றும் பெட்ரோல் விலை கடுமையாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.
- உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததற்கு அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.
- உலக நாடுகளிடம் உக்ரைன் உடனடியாக போரை நிறுத்த வேண்டுதலை வைத்துள்ளது.
- உக்ரைன் மீது தொடுத்த போரைப் பற்றி உலக நாடுகள் பேசினால் கடும் விளைவைச் சந்திக்க நேரிடும் என ரஷ்யா எச்சரிக்கை.
- உக்ரைன் நாட்டில் இருக்கின்ற தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தல்
- தமிழகத்தில் 574 பேருக்கு கொரானா பாதிப்பு.
- இலங்கைக்கு எதிரான 20—20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி